Registered as a Newspaper

COMMERCE
வகுப்புக்கள்
88 Aug.
ஆரம்பம்:
1 - 02 - 86
சனி காலை 8 மணி
விபரங்கட்கு:
New Master
INSTITUTE
BMC Lane, Jaffna.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

COMMERCE
வகுப்புக்கள்
88 August
பொருளியல் - திரு. குமாரவேல்
கணக்கியல் - திரு. மரியதாஸ்
வர்த்தகம் - திரு. ஜெயராமன்
இந்து நாகரிகம் - திருமதி அருள் நங்கை
அளவையியல் - திரு. சந்திராசா
தமிழ் - திரு. பாலா
New Master Institute
BMC Lane, Jaffna.

சுடர்: 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு தை மீ௳ 25 வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 27 (07.02.1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்: 70

# ராஜீவுக்கு தந்த வாக்குறுதியை மீறினார் ஜே. ஆர்.

## கடுமையான போக்கையே இனி இந்தியா கடைப்பிடிக்கும்

புதுடில்லி, பெப். 6

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளுக்கு இலங்கை அரசாங்கம் அளித்த பதில், இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன பிரதமர் ராஜீவ் காந்திக்கு அளித்த வாய்மூலமான உறுதிமொழிக்கு மாறானதாக உள்ளது. தமது வாக்குறுதியை அவர் மீறி விட்டார்.

'இந்து' ஆங்கில நாளிதழின் பிரதம செய்தியாளர் திரு. ஜி. கே. ரெட்டி இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

திரு. ரெட்டி தனது செய்திக்கட்டுரையில் மேலும் கூறியுள்ளதாவது:-

தமிழருக்குப் போதிய சுயாட்சி வழங்கக் கூடியதான தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

இதனைத் தொடர்ந்து இலங்கை மீதான போக்கை, இந்தியா கடுமையாக்கி உள்ளது. கூட்டணியின் மாற்று யோசனைகளுக்கான இலங்கையின் 57 பக்க பதில், அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனைகளை நிராகரிப்பதாக மட்டுமல்ல, பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன வழங்கிய வாய்மூல உறுதிமொழிகளையும் மீறுவதாக அமைந்துள்ளது.

இது பிரதமர் ராஜீவ் காந்தியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து, பிரதமர் ராஜீவ் காந்தி திரு. பண்டாரியின் விஜயத்தை ரத்து செய்யும்படி உத்தரவிட்டார்.

இலங்கை அரசின் பதில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு பாதகமான அணுகுமுறையில் அமைந்துள்ளது என்பது திரு. பண்டாரியின் கருத்து.

மேலும் பேச்சுக்களை நடத்துவதற்கு இலங்கை அரசின் பதில் சரியான அடிப்படையாக இருக்கவில்லை என்பது திரு. பண்டாரியின் அபிப்பிராயம்.

பேச்சுவார்த்தைகள் என்பதைச் சாட்டாக வைத்துக்கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவதுதான் இலங்கை அரசின் தந்திரம் என்று புதுடில்லி

(4-ம் பக்கம் பார்க்க)

## பரந்தன் சம்பவம் இருவர் மரணம்

### ஒருவர் சைனைட் உட்கொண்டார்

விசுவமடு, பெப். 7

நேற்று பரந்தன் பகுதியில் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் பலியாகினர். ஒருவர் சைனைட் உட்கொண்டு இறந்தார். நால்வர் காயமடைந்தனர்.

இதேவேளை வீதியில் நின்ற தட்டிவான் ஒன்றும் இராணுவத்தால் எடுத்துச் செல்லப்பட்டது.

சம்பவம்பற்றித்தெரிய வருவதாவது:

நேற்றுவியாழக்கிழமை அதிகாலை பரந்தன் பகுதிக்குச் சென்ற இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது வயலுக்கு நீர்ப்பாய்ச்சிவிட்டு வந்த இராமநாதன் மகேந்திரன் என்ற 35 வயது நபர் பலியானார்.

இருவர் படுகாயமடைந்தனர்.

மற்றொரு சம்பவத்தில் கிளிநொச்சி முகாமிலிருந்து சுமார் 18 கவச வாகனங்களில் ஆனையிறவு நோக்கிச் சென்ற இராணுவத்தினர் ஆனையிறவிலிருந்துகிளிநொச்சி திரும்புகையில் நண்பகல் ஒருமணியளவில் பரந்தன் சந்தியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதிலும் ஒருவர் பலியானார். மற்றொருவர் சைனைட் உட்கொண்டு மரணமானார். இருவர் படுகாயமடைந்தனர்.

இறந்தவர்களது சடலங்களை இராணுவம் கொண்டுவந்ததாகவும் வீதியில் நின்ற தட்டிவான் ஒன்றைக் கவச வாகனத்தில் கட்டி இழுத்துக்கொண்டு வந்ததாகவும் தெரியவந்தது.

இந்தச் சம்பவங்களினால் பரந்தன் கிளிநொச்சிப் பகுதிகளில் நேற்றும் பதற்றம் நிலவியது.

## கரடியனாற்றில் இராணுவம்

மட்டக்களப்பு, பெப். 7

மட்டக்களப்பில் உள்ள கரடியனாறு விவசாயப் பண்ணை கட்டடத்தில் ஆயுதப்படையினர் தற்போது கூடாரமடித்து முகாமிட்டுள்ளனர்.

இந்த விவசாயப் பண்ணைக் கட்டடம் ஏற்கனவே குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு விமான நிலையத்தில் துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு, பெப். 7

மட்டக்களப்பு விமான நிலையப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்ற மூன்று இளைஞர்களை நோக்கி ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இளைஞர்கள் தாம் வந்த சி. 70 மோட்டார் சைக்கிளை அங்கே கைவிட்டு தப்பிச் சென்றனர்.

அவர்கள் கைவிட்டுச் சென்ற பை ஒன்றுக்குள் இரண்டு கிரெனேட்டுக்களும் சில தேசிக்காய்களும் இருந்தன என்று ஆயுதப் படையினர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் மட்டக்களப்புக்கு கொழும்பில் இருந்து விமானப்படை விமானம் ஒன்று வந்து செல்வது வழக்கம்.

அப்படி விமானம் நேற்று வந்து இறங்க இருந்த சமயமே மேற்கண்ட சம்பவம் நடந்தது.

இச் சம்பவத்தின் பின்னர் மாந்திவு ஆஸ்பத்திரி ஊழியர் விடுதி தாக்கப்பட்டு சேதம் அடைந்தது.



நேற்று முன்தினம் பருத்தித்துறையில் நடந்த சம்பவங்களில் காயம் அடைந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டவர்களில் இருவரை படங்களில் காணலாம்.

முதலாவது படத்தில் காணப்படுபவர் செல்வானந்தராஜா நிரூபா (வயது 10). வடஇந்து மகளிர் கல்லூரி மாணவியான இவருக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது.

இரண்டாவது படத்தில் காணப்படுபவர் கிருஷ்ண பிள்ளை இராசேந்திரம் (வயது 26) பருத்தித்துறை நகரசபை மின்சார ஊழியரான இவருக்கு வயிற்றுப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

# நேற்றும் இருவர் பலி பருத்தித்துறையில் பதற்றம் நீடிப்பு

-பருத்தித்துறை, நாகர்கோவில் செய்தியாளர்கள்-

பருத்தித்துறை பெப் 7

பருத்தித்துறையில் நேற்றும் இருவர் கொல்லப்பட்டனர்.

நேற்று முற்பகல் 11 மணி அளவில் கல்லூரி வீதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

பொலீஸ் - இராணுவ கூட்டு முகாம் பகுதியில் இருந்து வந்த துப்பாக்கி வேட்டுகளே இவர்களின் உயிரைப் பறித்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பருத்தித்துறைப் பகுதியில் நேற்று மீண்டும் பதற்றம் நிலவியது.

மக்கள் தங்களது அன்றாடத் தேவைகளுக்கு வெளியே செல்லக் கூட அஞ்சுகிறார்கள்.

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியனவற்றின் கிளைகளும், நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நகரசபைக் காரியாலயம் ஆகியனவும் வேலை செய்யவில்லை.

நவீன சந்தையில் இயங்கிய கடைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட மருதடியிலுள்ள தற்காலிக சந்தையும் சிவன் கோயிலுக்கருகாமையில் ஒரு சிறிய சந்தையும் கூடியுள்ளன.

புதனன்று நடந்த சம்பவத்தில் மீன் சந்தையிலுள்ள வியாபாரிகள் கொலையுண்டதால் நேற்று மீன் சந்தை திக்கமுனை மைதானத்தில் கூடியது.

இ. போ. ச. நேரக் கணிப்புக் காரியாலயம் மூடப்பட்டுள்ளது. ஒரு சில பஸ்கள் பழைய பஸ் நிலையத்திலிருந்து சேவையை ஆரம்பித்தன. மினி பஸ்கள் மருதடி வைரவர் ஆலயத்திலிருந்து புறப்பட்டன.

பருத்தித்துறையில் புதன் மாலை நடைபெற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



வடக்கிலே இராணுவத்திட்டை சூடு வாங்கிறவை எல்லாரும் ''பயங்கரவாதிகள்!'' கொழும்பிலே சூடு வாங்கின எம். பி யையும் அந்த லிஸ்டிலை சேர்ப்பினமோ பின்னை....?

## மலையகத்தில் படையினர் செயற்படும் விதம் குறித்துப் புகார்

கொழும்பு, பெப். 7

தமிழர், சிங்களவரைத் தாக்கினால் பாதுகாப்புப் படையினர் அந்த இடத்துக்கு உடனே வந்து நடவடிக்கை எடுக்கின்றனர்.

சிங்களவர், தமிழரைத் தாக்கினால் பாதுகாப்புப் படையினர் உடனடியாக வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.

மலையகத்தில் இந்த ரீதியில் தான் அரச படையினர் செயல்படுகின்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் இவ்வாறு முறையிடப்பட்டுள்ளது.

நேற்றும் ஹட்டனில் பதற்ற நிலை நிலவியது.

தமிழ் அரசாங்க ஊழியர்கள், தொழிலாளர்கள் நேற்று வேலைக்குச் சமுகமளிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டது.

காடையர்கள் சந்திகளில் நின்று மிரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதே இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

இந்த நிலைமையில் அமைச்சர் தொண்டமான் நேற்று மீண்டும் பதற்றம் அடைந்த பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

### சுபநேரம்

7.2.1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.35 முதல் 8.05 வரை

ராகுகாலம்:
11.05 முதல் 12.35 வரை

இன்ற பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# ராணுவம் சுட்டு அரசாங்க எம். பி. படுகாயம்!

## ஆபத்தானநிலையில் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, பெப். 7

அரசாங்க எம். பியை இராணுவம் சுட்டது. அந்த எம். பிக்கு பெரிய அளவிலான சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அவரது நிலைமை கவலைக்கு இடமாக உள்ளதாகப் பிந்தி வந்த செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த மஹர எம். பியான திரு. அமலவர்ண ஜெயக்கொடி ஆவார்.

நேற்று அதிகாலை சுமார் 2 மணி அளவில் திரு. ஜெயக்கொடி காரில் கொழும்புக்கு வெளியே சென்று கொண்டிருந்தார். கணேமுல்ல என்ற இடத்துக்கு வந்ததும் ஆயுதப் படையினரின் தடை முகாம் ஒன்றைத் தாண்ட வேண்டி இருந்தது. இது

(4 ம் பக்கம் பார்க்க)

## பட்டிருப்பு கணேசலிங்கம் காலமானார்

சென்னை, பெப். 6

பட்டிருப்புத் தொகுதியின் முன்னாள் எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் சென்னையில் காலமானார்.

1977 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் பட்டிருப்புத் தொகுதியின் எம். பி. யாக அவர் தெரிவு செய்யப்பட்டார்.

சென்னையில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அவர் காலமானார். அவரின் வயது 49.

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் அன்னாரின் மறைவு குறித்து அஞ்சலி செலுத்தினர்.

## கண்ணி வெடியில் ஆயுதப் படை வீரர் ஐவர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 7

வவுனியா பகுதியைச் சேர்ந்த பம்பைமடு தாளம்பைகுளத்துக்கு சமீபமாக நேற்று இடம் பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தில் 5 ஆயுதப் படையினர் காயம் அடைந்தனர்.

இதன் பின்னர் நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் பொதுமக்களில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். சில வீடுகள் சேதம் அடைந்தன.

பிரேமானந்தன் என்பவரே சூடுபட்டு இறந்தவர். அவரது சகோதரர் வதனசேகர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போதிலும் அவர் மயிரிழையில் தப்பினார் என்று கூறப்படுகிறது.

காயம் அடைந்த ஆயுதப்படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இச் சம்பவத்தை அடுத்து வவுனியா முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் நகரில் சில தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டனர்.

ஹெலிக்கொப்டர்கள் நகரைச் சுற்றிப் பறந்ததால் பெரும் பதற்றம் நிலவியது.

## மன்னாரில் பஸ்கள் ஓடவில்லை

யாழ்ப்பாணம், பெப். 7

மன்னாரில் நேற்று அரசாங்க பஸ்கள் எதுவும் ஓடவில்லை. மன்னார் போக்குவரத்துச் சபை ஊழியர் ஒருவர் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே பஸ்கள் ஓடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மன்னார்பஸ் ஊழியர்கள் 15 பேர் தள்ளாடி இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு நீண்ட விசாரணைக்குப்பின்னர் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

## பஹ்ரைனில் இருந்து திரும்பிய இளைஞர்கள் கைது

கொழும்பு, பெப். 7

பஹ்ரைனில் இருந்து திரும்பிய இரண்டு தமிழ் இளைஞர்களைக் கொழும்புப் பொலீஸார் கடந்த புதன்கிழமை கைது செய்தனர்.

பத்மசிலன், மனோகரன் ஆகிய இந்த இளைஞர்கள் பஹ்ரைனில் தொழில் பார்த்துவிட்டுத் திரும்பி இருந்தனர்.

கொழும்பு மக்கள் வங்கிக் கிளை ஒன்றில் காசோலை ஒன்றை மாற்றுவதற்கு இவ்விருவரும் சென்றிருந்தனர்.

வங்கி அதிகாரிகள் இவர்

(4-ம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய கலைஞர் மிக வல்லவர்கள்

''காவல் தெய்வம்'' முதல் 'பிரேமபாசம்' வரை ஐம்பது படங்களை இயக்கியவர் கே. விஜயன். பல படங்களில் நடித்துப் பாராட்டுக்களைப் பெற்று, பின் இயக்குநர் ஆனவர் அவர்.

சினிமா உலகப் பிரமுகர்களில் வித்தியாசமானவர். எந்த வித ஆர்ப்பாட்டமும் இல்லாதவர்.

சிந்தனை வயப்பட்டமுகம், உதட்டோரத்தில் சின்னச் சின்ன புன்னகைகள்.

### கூறுபவர் விஜயன்

சிவந்த கண்கள், திட்சண்யமான பார்வை, பணிவான பேச்சு.

இவை அனைத்தும் அவர் ஒரு பண்பட்ட இயக்குநர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

இன்றைய இளைய தலைமுறைக் கலைஞர்களைப்பற்றி அவர் சொல்கிறார் :

''எல்லோரும் புதிய சிந்தனை உடையவர்களாக இருக்கிறார்கள். பல நல்ல கருத்துக்களை வெவ்வேறு முறையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் மிக அழகாக எடுத்துச் சொல்கிறார்கள்.

அன்றைய இயக்குநர்கள், காதலுக்கோர் எடுத்துக்காட்டாக அனார்கலி — சலீம், அம்பிகாபதி — அமராவதியை நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்தினர்கள்

இன்றைய இயக்குநர்கள் அதற்கு எடுத்துக்காட்டாக ராஜா, சுபத்ரா, விச்சு, மேரியை உருவாக்கி நமது கண்களைக் குளமாக்கி விட்டார்கள்!

அன்று கவிஞர் கண்ணதாசன் காதல் வயப்பட்டவர்களைப் பற்றிப் பாடல் எழுதும்போது 'தண்ணீர் சுடுவதென்ன' என்றார்.

இன்று கவிஞர் வைரமுத்து, 'அந்திமழை' பாடலில் 'தண்ணீருக்குள் நிற்கும்போது வேர்க்கின்றது' என்கிறார்.

குருவிக் கரம்பை சண்முகம், 'கவிதை அரங்கேறும்' பாடலில் 'நீரில் நின்றுடும்போது சுடும் நெருப்பாய் என் தேகம் மாறும்' என்கிறார்.

இன்றைய ரசனைக்கேற்றபடி இப்பாடல்கள் அமைந்திருக்கின்றன. இப்படி எல்லாக் கலைஞர்களுமே தங்கள் பங்கை மிக வல்லமையுடன் செய்து கொண்டிருக்கின்றனர்' என்றார்.

தினசரி சினிமா

## பெய்ரூட்டில் குண்டு வெடிப்பு

பெய்ரூட், பெப்.6

பெய்ருட்டின் வடபகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 9 பேர் கொல்லப் பட்டனர். 29 பேர் காயம் அடைந்தனர்.

கிறிஸ்தவர்கள் வாழும் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

# ஐ. நா. சபையில் தென் ஆபிரிக்க சீர் திருத்தங்கள்

## ஆபிரிக்க தேசியவாதிகள் கண்டனம் தெரிவித்து நிராகரிப்பு

தென் ஆபிரிக்க அரசு தெரிவித்துள்ள புதிய சீர்திருத்தங்களை ஆபிரிக்க பிரதிநிதிகள் நிராகரித்து விட்டனர்.

ஐ. நா சபைக்கூட்டத்தின் விவாதத்தில் கலந்து கொண்ட கறுப்பின விடுதலை இயக்க பிரதி நிதிகளே இவ்வாறு நிராகரித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு நடந்த விவாதத்தில் அவர்கள் கலந்து கொண்டனர்.

தென் ஆபிரிக்க ஆசிய வாதிகளுக்கெதிராக ஆபிரிக்க அரசு புரியும் குற்றங்கள் கண்டிக்கப் படவேண்டும்.

பிரிட்டோரிய அரசுஇந் தக்குற்றங்களுக்காகதண்டிக்கப்படவும் வேண்டும். இந்த விடயங்களை உலக ஸ்தாபனம் தெளிவு படுத்திவிட வேண்டும்,

இவ்வாறு தென் ஆபிரிக்க தேசிய தலைவர்கள் ஐ. நா. விவாதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

தென் ஆபிரிக்க அரசுத் தலைவர்; போத்தா கறுப்பர்கள் பிரச்சினையைத் தீர்க்க 'தேசிய அரசமைப்பு கவுன்சில்' ஒன்று அமைப்பது பற்றி அறிவிப்பொன்றை ஏற்கனவே விடுத்திருந்தார்.

அரசியல் அமைப்பு ஆலோசனைச் சபையின் உயர்மட்ட உறுப்பினர்களாக கறுப்பர்கள் வர வாய்ப்புண்டாகும் என அவரது விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டது.

## தெ. ஆ. தே. காங்கிரஸ் தலைவருடன் பிரிட்டிஷ் அதிகாரி பேச்சு

லண்டன், பெப்,6

கறுப்பு இன மக்களின் விடுதலைக்காகப் போராடும் தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் பிரிட்டன் உத்தியோக ரீதியில் முதன் முறையாகத் தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளது.

தென்ஆபிரிக்க காங்கிரஸ் தலைவரை, பிரிட்டன் வெளியுறவு அமைச்சக அதிகாரி பொஸ்காவில் சந்தித்தார்.

தென் ஆபிரிக்காவில் இடம் பெறும் வன்செயல்கள் பற்றி இருவரும் பேச்சுக்கள் நடத்தினர்.

தென் ஆபிரிக்க அரசாங்கம்தான் வன்செயல்களைத் தொடக்கியது என்று தென் ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் பேச்சுக்களின் போது சுட்டிக் காட்டினர்.

பொதுநல அமைப்பு நாடுகளின் தூதுக்குழு ஒன்று தென்ஆபிரிக்காவுக்கு விஜயம் செய்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவு தேடும் நடவடிக்கையில் பிரிட்டன் ஈடுபட்டுள்ளது.

பிரிட்டிஷ் அதிகாரி இது குறித்து தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஆதரவையும் நாடினர்.

## உகண்டா ஒப்பந்தம்

நைரோபி,பெப் 6

உகண்டா ஒப்பந்தத்தை புதிய ஆட்சியாளர் கௌரவிக்க வேண்டும்.

இப்படி பதவி கவிழ்க்கப்பட்ட உகண்டா அதிபர் லெப்டினன்ட் ஜெனரல் பஸிலியோ ஒகெல்லோ கேட்டுள்ளார்.

பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் ஒகெல்லோ விடுத்த முதலாவது அறிக்கை இது

## லிபிய விமான விவகாரம்
## சர்வதேச சட்டத்தை இஸ்ரவேல்மீறியுள்ளது
### பாரத வெளியுறவு அமைச்சர் கண்டனம்

புதுடில்லி, பெப்.6

லிபியாவின் பயணிகள் விமானத்தை பலவந்தமாகத் தரையிறக்கிய இஸ்ரவேலின் நடத்தை எல்லா நாடுகளாலும் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இவ்வாறு பாரத வெளியுறவு அமைச்சர் பலேராம் பகத் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் மூலம் இஸ்ரவேல் சர்வதேச விமானப் போக்குவரத்துச் சட்டத்தை மீறியுள்ளது எனவும் பகத் தனது கண்டனத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மார்க்கோஸின் கொடும்பாவி எரிப்பு
### இடதுசாரிகள் நடத்தினர்

மணிலா, பெப். 6

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

5000 பேருக்கு மேற்பட்ட இடதுசாரி ஆதரவாளர்கள் மார்க்கோஸின் அரண்மனை நோக்கி ஊர்வலமாக திரண்டு போய் கொடும்பாவியை எரித்தனர்.

தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோஷமெழுப்பிக் கொண்டு சென்றபோது படையினர் முட்கம்பி வேலி போட்டு அவர்களை முன்னேற விடாது தடுத்தனர். 'பயான்' என்ற விடுதலை இயக்கமும் கே. எம். யூ. என்ற தீவிரவாத தொழிற்சங்க இயக்கமுமே இந்த ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கூடிய அளவில் இளைஞர்களே கலந்து கொண்டதாகவும் அவர்கள் தம்மை அடையாளம் காட்டாதவாறு முகமூடிகள் அணிந்து காணப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

## வெளி உலகில்

## பிரதமர் ராஜீவ் மாலைதீவு பயணம்
### ஜனாதிபதி கையூமுடன் வர்த்தக உடன்படிக்கை கையெழுத்தாகும்

புதுடில்லி, பெப்.6

பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி இன்று மாலை தீவுக்குப்பயணமாகிறார்.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூமுடன் பாரத - மாலைதீவு உறவுகளை நெருக்கமடையச் செய்வதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவார்.

வர்த்தக பொருளாதார உடன்படிக்கையொன்றும் இருநாடுகளுக்கிடையிலும் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் ராஜீவுடன் பாரத வர்த்தக அமைச்சர் பிரதாப் சிங்கும் மற்றும் அதிகாரிகளும் கூடச் செல்வார்கள்.

மாலைதீவு விஜயத்தின் போது 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மசூதியொன்றை பிரதமர் பார்வையிடுவார்.

## உறவை சீராக்க பேச்சு

அம்மான், பெப். 6

ஜோர்தானும் சிரியாவும் உறவுகளைச் சீராக்க உள்ளன.

இது சம்பந்தமான புதிய பேச்சுக்கள் சிரிய அதிபர் ஹாபிஸ் ஆஸாத்துக்கும் ஜோர்தான் மன்னர் ஹுசேனுக்கும்இடையில்இடம்பெற உள்ளன.

ஏழுவருட இடைவெளியின் பின்னர் இரண்டு நாடுகளும் உறவை வளர்க்க விருப்பம் தெரிவித்திருந்தன.

## நீத்தார் புகழாரம்
### எஸ்.அமிர்தலிங்கம்



நண்பன் அமிர்தலிங்கம் அமரராகி விட்டார். எமது சட்டத்தரணிகளில் ஒருவராகவும், எனது நண்பர்களில் கிட்டியவராகவும் பொது மக்கள் சேவையில் முக்கியஸ்தராகவும் இருந்த அமிர்தலிங்கம் இப்போது எம்மத்தியில் இல்லை என்பது எமது மனதில் ஒரு தாக்கத்தை தருகிறது.

அதுவும் சடுதியாக அன்பு மனைவியையும் அருமைக் குழந்தைகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் துயரத்தில் ஆழ்த்திவிட்டு எம்மத்தியில் இருந்து அகன்ற விடயத்தை நாம் நினைக்கும் போது ஏக்கத்தையே தருகிறது.

திரு. அமிர்தலிங்கம் நில அளவையாளர் சின்னத்துரையின் ஒன்பது பிள்ளைகளில் ஒருவராக மலேசிய நாட்டில் பிறந்தார். அன்னாரது காலம் சென்ற தந்தை சின்னத்துரை காரமும் கண்ணியமும் மிக்கவர்.

திரு. அமிர்தலிங்கத்தின் மறைவால்ஏற்பட்ட பேரிழப்பை நாங்கள் ஒருபோதும் நிவர்த்தி செய்யமுடியாது. ஆனால் அவருடைய பண்புகளை அறிந்து அவற்றைக் கடைப்பிடித்து ஓரளவு ஆறுதலடையலாம்.

திரு அமிர்தலிங்கம் ஆரம்பத்தில் யாழ் இந்துக் கல்லூரியில் பயின்று பின்பு உயர்தர வகுப்புக்களை யாழ். மத்திய கல்லூரியில் முடித்து, பின்னர் சில காலம் ஆசிரியராக மகாஜனக் கல்லூரியில் பணிபுரிந்தார். பின்னர் இலங்கை கப்பல் கூட்டுத் தாபனத்தில் கடமையாற்றினர்.

அவ்வேளை தனது தொழிலைப் புரிந்து கொண்டே சட்டக் கல்லூரியில் சேர்ந்து குறுகிய காலத்தில் சட்டத்தரணியாக வெளியேறினர். இவருடைய மதிநுட்பத்தை அறிந்து பிரபல சட்டத்தரணியும் முன்னாள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முதல்வருமான திரு ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசுவாமியின் விருப்பத்தின் பேரில் அவரிடமிருந்தே சட்ட நுணுக்கங்களை கற்றறிந்து அவருக்கு மிகவும் பிடித்த மான மாணவனாகவும் உற்ற நண்பனாகவும் திகழ்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் தனியாகச் சட்டத்தரணி தொழிலில் இறங்கிவெகு விரைவில் இவர் நீதிவான் நீதிமன்றத்தில் ஓர் முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

தெளிவான மொழியில் காத்திரமான வாதங்களை செப்பி நீதிவான்களினதும், சகல சட்டத்தரணிகளினதும் கட்சிக்காரரினதும் பெரு மதிப்பைப் பெற்று மிகுந்த இளவயதில் சமாதான நீதிவானாகவும் பதில் நீதிவானாகவும் மரணவிசாரணை அதிகாரியாகவும் இயங்கும் ஸ்தானத்தைப் பெற்றார்.

இவருடைய ஆற்றலுடன் கட்டுப்பாடும் கண்ணியமும் சேர்ந்திருந்தபடியால்தான் இப்பெருநிலையை இவரால் அடைய முடிந்தது.

திரு. இராஜராஜேஸ்வரன்.

[பிரபல சட்டத்தரணியும், சட்டத்தரணிகள் சங்கச் செயலாளரும்]

## வேலணையில் கலைவிழா

வேலணை, பெப்.7

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட அகதி முகாமுக்கு நிதி சேகரிக்குமுகமாக கலைவிழா ஒன்று எதிர் வரும் 9ஆம் திகதி பிரஸ்தாபவித்தியாலயத்தில் நடைபெறும்.

## சட்டவிரோத மின்சாரத் தடையின் அவசியம் பற்றி வலியுறுத்து

மானிப்பாய், பெப். 7

சட்ட விரோத மின் பாவனையை பொதுமக்கள் கைவிட வேண்டும்.

சுன்னுகம் பட்டினசபைக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோத மின் பாவனையை தடை செய்யும் ஆலோசனைக் கூட்டத்தில் மின்சாரசபை அத்தியட்சகர் திரு. தி. நற்குணமாணிக்கம் மேற்கண்டவாறு கூறினர்.

உடுவில் மக்கள் சபையினரின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு அதன் தலைவர் திரு. சு. தேவராஜன் தலைமை வகித்தார்.

மின் அத்தியட்சகர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

சட்டவிரோத மின்பாவனையால் சட்டரீதியாக மின்சாரம் பெறுவோருக்கு நாம் சிறந்த சேவைகளை ஆற்றமுடியாமல் உள்ளது சட்டவிரோத மின்பாவனை பெறுபவர்களை சட்டரீதியாக மின்சாரம் பெறுமாறு பொது மக்கள் வற்புறுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினர்.

சுன்னுகம் பட்டினசபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் சார்பில் பட்டினசபை மின்சாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. மா. கணேஸ்வரன் உரையாற்றுகையில், மின்பாவனையாளரின் கட்டணங்களைக் கொண்டு நாம் மின் விஸ்தரிப்பு, மின் இணைப்பு வேலைகளைச்செய்யக்கூடியதாக இருந்தது

சட்ட விரோத மின் பாவனையால் தற்சமயம் மின் கட்டணமாகப் பெறப்படும் பணம் மின்சாரசபைக்கு கட்டவே போதாது உள்ளது என்றார்.

சுன்னுகம் பட்டினசபையின் 7ஆம் 8ஆம் வட்டாரங்களில் சட்ட விரோத மின்பாவனையாளர்களை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் பொது மக்கள் கண்காணிப்புக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

மக்கள் குழு செயலாளர் திரு வி. பரிபூரணனந்த சர்மா நன்றி கூறினர்.

## கரவெட்டியில் மூளைக்காய்ச்சல்

கரவெட்டி, பெப் 7

கரவெட்டி பகுதியில் மூளைக் காய்ச்சல் பரவி வருகின்றது.

அண்மையில் மூளைக் காய்ச்சலால் சிறுவர் ஒருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு இறந்தார்.

இதேவேளை கட்டைவேலி பகுதியிலும் ஒரு சிறுவன் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

## சந்திவெளியில் புதிய முகாம்

மட்டக்களப்பு, பெப். 7

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் சந்திவெளி என்னும் இடத்தில் ஆயுதப்படையினர் புதிய முகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

தனியார் அரிசி ஆலை ஒன்று இதற்காகச் சுவீகரிக்கப்பட்டது.

## மனிதனுகப் பிறந்து நடித்துக் கொண்டிருக்கிறேம்
### தங்கம்மா அப்பாக்குட்டி

நல்லூர், பெப்.7

நாம் இந்த உலகில் மனிதனுகப் பிறந்து நடித்துக்கொண்டிருக்கின்றேம். இந்த நடிப்பு போலிநடிப்பாக இருக்கக்கூடாது. இறுதியில் எமது வாழ்க்கையே போலி வாழ்க்கையாக முடிவடைந்துவிடும்.

யாழ் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற திரு இ. வைத்திலிங்கம் நினைவஞ்சலி விழாவில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு தெரிவித்தார்.

திரு. க. [illegible] (வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர்) தலைமையில் விழா நடைபெற்றது.

நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகள் திரு. இ. வைத்திலிங்கத்தின் நிழற்படத்தை திரை நீக்கம் செய்து வைத்தார்.

திரு. க. கனகரத்தினம் மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, க. சசிதரன், பண்டிதர் நி. சி. முருகேசு ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

திரு. வைத்திலிங்கத்தின் [illegible] அன்னதானமும் வழங்கப்பட்டது.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# மணிஓடருக்கு அதிக பணம்கொடுத்து விட்டு முறையிடாதீர்

### ரயில்வே அதிகாரி கூறுகிறார்

நல்லூர், பெப். 7

யாழ். ரயில் நிலையத்தில் தரகர்களிடம் மணி ஓடர்கள் வாங்கும் பயணிகள், அது சம்பந்தமான முறைப்பாடுகளை ரயில் நிலைய அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மணிஓடரில் உள்ள தொகையிலும் பார்க்க கூடுதல் பணத்தைக் கொடுத்து அதை வாங்கும் பயணிகள் பின்னர் அது சம்பந்தமாக ரயில் நிலைய அதிகாரிகளிடம் முறையிடுகின்றனராம்.

அதைத் தொடர்ந்தே ரயில் நிலைய அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

## பெண்களுக்கு தொழிற்கல்வி அவசியம்
### தையல் பொருட் காட்சியில் உரை

மானிப்பாய், பெப் 7

பெண்பிள்ளைகள் பாடசாலை கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் அல்லது படித்துக்கொண்டிருக்கும் போதே மனையியல்,கைப்பணி, தையல் போன்ற தொழிற் கல்விகளையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

சண்டிலிப்பாயில் நடைபெற்ற தையல் பொருட் காட்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய சத்தியபுரம் சிற்றுலய தையல் நிலையப் பயிற்சி ஆசிரியை செல்வி தி. செனித்ரா இவ்வாறு கூறினர்.

சண்டிலிப்பாயில்உள்ள கிறிஸ்தவ தொடர்புகள் நிலையத்தில் தையல் பொருட்காட்சி நடைபெற்றது.

கிறிஸ்தவ தொடர்புகள் நிலைய தலைவரின் தலைமையில் நடைபெற்ற பொருட்காட்சியில் சிறந்த தையல் பயிற்சியாளர்களுக்கு செல்வி தி. செனித்ரா சான்றிதழ்கள் வழங்கினர்.

## யாழ் பல்கலை விரிவுரையாளர் ஆய்வு

யாழ்ப்பாணம்,பெப்.7

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஈ. பாலசுந்தரம் ''சித்தர் பாடல்களின் தத்துவம் எவ்வாறு உடல் உள நோய்களுக்கு மருந்தாக அமைகிறது'' என்பது பற்றி ஆய்வொன்றை மேற்கொண்டு உள்ளார்.

சித்த வைத்தியத்துடன் தொடர்புள்ள பாடல்கள் இலக்கியங்கள் உள்ள பெரியார்களைத் தம்முடன் தொடர்பு கொண்டு உதவும்படி கலாநிதி ஈ. பாலசுந்தரம் உதயன் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இயக்கச்சிக்கு இராணுவம்

கிளிநொச்சி, பெப். 7

புதன் அதிகாலை ஒன்றரை மணியளவில் இயக்கச்சிக்கும் குறிஞ்சாதீவுக்கும் இடையில் மர்மமான முறையில் குண்டு ஒன்று வெடித்ததைத் தொடர்ந்து இராணுவம் இயக்கச்சிப் பகுதிக்கு 'படை' எடுத்தது.

இரண்டு இ. போ. ச. பஸ்களிலும் ஒரு தனியார் வாகனத்திலும் இயக்கச்சிக்கு வந்த படையினர் குண்டு வெடித்த இடத்தை நோட்டமிட்டதுடன் சிலரை விசாரித்தும் சென்றுள்ளனர்.

அதன் பின்னர் புதன் காலை படையினர் முகாமுக்குதிரும்பிய சிறிது நேரத்தில், இரண்டு குண்டுகள் வெடித்துச் சத்தம் கேட்டது. இக் குண்டு வெடிப்பால் பிரதான கண்டி வீதி சிறு சேதம் ஏற்பட்டுள்ளது. அசம்பாவிதம் எதுவும் இல்லை,

## யுனிசெப் திட்ட நூல் வெளியீடு

மட்டக்களப்பு, பெப்.7

மட்டக்களப்பு மாநகர பகுதியிலும் புதுக்காத்தான்குடிப் பகுதியிலும் யுனிசெப் மேற்கொண்ட திட்டங்களை உள்ளடக்கிய நூலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

நூல் வெளியீட்டு விழா அண்மையில் 'யுனிசெப்' இணைப்பாளரும் மாநகரசபை ஆணையாளருமான திரு. பெணடிக் தார்ஸிசியஸ் தலைமையில் நடைபெற்றது.

## தமிழ் அகதிகளுடன் அமர்ந்து உணவருந்திய சிங்கள எம்.பி.

திருகோணமலை, பெப் 7

தமிழ் அகதிகளுடன் இருந்துசிங்கள யு.என்.பி. எம். பியும் உணவருந்தினர்.

புதன்கிழமை திருகோணமலையில் இந் நிகழ்ச்சி இடம் பெற்றது.

சுதந்திர தினத்தை ஒட்டி திருமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் தங்கியுள்ள 225 தமிழ் அகதிகளுக்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் அன்று மதிய உணவு வழங்கியது.

இந்த நிகழ்ச்சியில் சேருவில எம்பி திரு. எச். டி. எல். லீலரத்தினவும் கலந்து கொண்டார்.

அங்கு பேசுகையில், ''தீவிரவாத இயக்கத்தில் சிங்களவர்களில் ஒரு சிறு பகுதியினர் ஈடுபட்டுள்ளனர் என்று திரு. லீலரத்தின சொன்னார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

மற்றவரை சபிக்கின்றவர், கேவலமாகப் பேசுபவர், புண்படுத்தும் வார்த்தைகளைப் பாவிப்பவர் உண்மையான முஸ்லிமாக இருக்க முடியாது.

-பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 24805, 22073
07-02-86 த. பெ. 23

# வடக்கு ரயில் பயணிகளுக்கு இப்படியும் அகௌரவம்!

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தமிழ்ப் பயணிக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் குறித்து நேற்றைய உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் ஒருவர் திரும்பவும் கொழும்பு செல்வதற்குமாகச் சேர்த்து இருவழிப் பாதை டிக்கட் எடுத்தார். அதற்காக அவர் 120 ரூபாவை மருதானை ரயில் நிலையத்தில் கூலியாகக் கொடுத்தார்.

ஆனால் இழைக்காத தவறுக்காக ரூபா 179/- வைத் தண்டப் பணமாகச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தபோது நடுவழியில் வைத்து, ரயில்வே அதிகாரிகள் அவரை ஒரு மோசடிக்காரர் என்ற கண்ணோடு நோக்கி பொலீஸ் நிலையம் கொண்டு செல்லப் போவதாகப் பயமுறுத்தியும் இருக்கிறார்கள்.

ரயிலில் பயணம் செய்வதற்குப் பணம் செலுத்தி டிக்கட் பெற்ற பாவத்துக்காக அவருக்கு இந்தக் கசப்பான அனுபவமும் மரியாதைக் குறைவும் ஏற்பட்டது. அவரது கௌரவமும் பாதிக்கப்பட்டது.

அவரது பயணத் திகதிகள் டிக்கட்டில் பிழையாகப் பதியப்பட்டிருந்தன. அதுவே இத்தனை கஷ்டத்துக்கும் கசப்புக்கும், கௌரவக் குறைவுக்கும் மன உளைச்சலுக்கும் காரணம்.

எய்தவன் இருக்க அம்பை நோகும் இந்த ஆற்றாமைக்குக் காரணம் யார்? அரசாங்கம் அன்றி வேறு எவராக இருக்க முடியும்!

பயணத் திகதியைச் சரியாக எழுதத் தெரியாதவர்களுக்கு ரயில்வே திணைக்களத்தில் என்ன வேலை? அவர்களுக்கு உத்தியோகம் கொடுத்த அரசாங்கம் தான் இத்தனைக்கும் பதில் சொல்லியாக வேண்டும்.

தற்செயலாக நடந்த தவறு என்றோ, எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பிழை என்றோ அரசாங்கமும் அந்த உத்தியோகத்தரும் காரணம் காட்டித் தப்ப முயற்சிப்பார்கள்.

என்ன விவகாரத்துக்காயினும் ஒருவரிடமிருந்து பணத்தைப் பெறும்போது ஒப்புக்கொண்ட விஷயத்தை அல்லது சேவையைச் செய்யும் கடமை அதனைப் பெற்றவருக்கு உண்டு.

ஆனால் அரசாங்கமோ, அதன் உத்தியோகத்தர்களோ அதைப்பற்றி அக்கறைப்படுவதாகவோ சட்டை செய்வதாகவோ இல்லை.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். சம்பந்தப்பட்ட பயணிக்கு ஏற்பட்ட அவமரியாதையும் மனக்கஷ்டமும் ஏனையோருக்கும் உண்டாகலாம்.

இப்படியான தவறுகளும் பயமுறுத்தல்களும் வடபகுதி ரயில்களில்தான் நடக்கின்றனவோ என்று சந்தேகப்பட இடமுண்டு.

வடபகுதிப் பயணிகள் என்றால் எதையும் எப்படியும் செய்யலாம் என்ற மனப்போக்கு ரயில்வே ஊழியருக்கு இருக்குமோ எனவும் ஐயப்பட வேண்டி உள்ளது.

அல்லது பழைய டிக்கட்டுக்களை வைத்து வடபகுதி ரயிப் பயணிகளைப் பகடைக்காய்களாகப் பாவித்து கொழும்புக் கோட்டை ரயில்வே உத்தியோகத்தர்கள் மோசடி செய்கிறார்களோ!

வடபகுதி ரயில் பயணிகளிடம் மேலதிக கட்டணம் அறவிட்டு அரசாங்கம் குதிரை விடுகிறதே நாமும் அப்படிச் செய்தால் என்ன என்று ரயில்வே ஊழியர்கள் நினைத்திருக்கலாம் அல்லவா?

அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி. அதனை அரசு எவ்வழி அரச ஊழியரும் அதே வழி என்று நாம் கொள்ள வேண்டியதுதான்.

வடபகுதி மக்களின் எந்தக் கஷ்டத்தையும் மன உளைச்சலையும் இந்த அரசாங்கம் உணர்வதாக இல்லை. கண்ணிருந்தும் அது தெரியாதவன்போல் அரசாங்கம் நடந்து கொள்கிறது. எந்தெந்த வகைகளால் தமிழனை நெருக்கிச் சுருக்கிட முடியுமோ அந்தந்த வழிகளை எல்லாம் அரசும் அதன் தலைவர்களும் ஊழியர்களும் செய்து வருகிறார்கள்.

இப்போது செவிடன் காதில் ஊதிய சங்குபோல் இருக்கும் தமிழன் குரல், சக்திமிக்க குரலாக மாறுவது எப்போது?

## இளைஞர் எங்கே?

திருகோணமலை, பெப். 6

நிலாவெளி, கோபாலபுரம் பகுதியில் ஆயுதப் படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஒரு தமிழ் இளைஞர் பற்றித் தகவல் எதுவும் இல்லை என்று பிரஜைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

மயில்வாகனம் பொன்னுத்துரை என்ற இளைஞரே கைதானவர்.

இதனிடையில் கைதான மூன்று இளைஞர்கள் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டு உள்ளனர்.

அவர்கள் பெயர் வருமாறு: சிவசேகரம் புஷ்பநாதன், கந்தையா நவரத்தினராஜா, கனகரத்தினம் மோகனராஜா.

# பக்தியும் ஞானமும் செறிந்த தாயுமானவர் பாடல்கள்

### கலைமாணி க. கணபதிப்பிள்ளை

இன்றைய காலகட்டத்தில் தெய்வ வழிபாடு அவசியம் என்னும் எண்ணம் மேலோங்கி வருகிறது. திக்கற்றவனுக்குத் தெய்வம் துணை என்பது பழமொழி.

தெய்வத்தைப் பரவுவதற்கு பல்வேறு வகையான வழிகள் உண்டு. எனினும் பாடலாற் பரவுதல் தனிச் சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு சமயியும் தத்தம் சமயப் பாடலை ஓதி உருகினால் உருகாதார் உள்ளத்தையும் உருகவைப்பான் எல்லாம் வல்ல இறைவன் என்பது ஆன்றோர் அநுபவம்.

எம் மத்தியிலே எத்தனையோ சமயங்கள், தெய்வங்கள், தத்துவங்கள். இறைவன் கடஉள்-கடவுள். எல்லாச் சமயமுமாய் அவற்றிற்கு அப்பாலாயும் உள்ளவன். சமயாதீதப்பரம் பொருள். எனினும் நம்மிற் பலர் சமய நெறி ஒன்றில் நின்று பாடிப் பரவிப் பணிகின்றோம்.

தேவார திருவாசகங்கள் மிகுந்த துணை புரிவன, இவை சைவர்க்கே உரியவை.

ஆனால், தாயுமானவர் திருப்பாடல்களோ சைவர்க்குச் சைவப்பாடலாகவும் ஏனையோருக்கு அவரவர் சமயக் கடவுளர் பாடலாகவும் விளங்குகின்றன.

''மதசம்மதம் பெறு... பரதேவதையை'' தாயுமானவர் பாடுகின்றார். ''சமயகோடிகள் எலாம் தம் தெய்வம் எம் தெய்வம்'' என்ற பெரிய பொருளைப் பரவுகின்றார்.

''பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பொருளை-பரிபூரணமான பொருளை, அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்'' அப்பொ



ருள் இருக்கும் தன்மையை எல்லோர்க்கும் காட்டுகின்றார்.

இந்தவகையில் மிதழிலே தோன்றிய தனித்துவமிக்க-தத்துவக் கருத்துக் கொண்டவை தாயுமானவர் திருப்பாடல்கள், இதனால் மேனாட்டார் கூட தாயுமானவர்க்குத் தலை வணங்குகின்றனர். இன்றைய காலக்கட்டத்தில் சமய நிலை கடந்த சமயாதீத நிலை யேலோங்கி வளர்ந்துள்ளது.

இந்நிலையில் பக்தியும் ஞானமும் வல்லோர் உள்ளுருகிப் பொருள் உணர்ந்து பாடத்தக்கதாகத் தாயுமானவர் பாக்கள் உள்ளன.

தாயுமானவர் இல்லறந் துறந்த துறவி. திருமூலர் திருமரபில் வந்த மௌன குருவின் உபதேசம் பெற்றவர். 'அவர் எங்கே, நாம் எங்கே' என அங்கலாய்க்கின்றோம்.

எமக்கும் அவர்க்கும் வெகுதூரம் என எண்ணுகின்றோம். எம்மை எல்லாம் ஆட்கொள்ளத்தக்க அருள் ஆற்றல் உள்ள பெருநிலை பெற்ற மகா ஞானி தாயுமானவர்.

ஆதலால் நாம் அஞ்சத் தேவையில்லை, எமது அவலம், கவலை தீர்க்கும் மருந்தை மகா வைத்திய நாதனிடம் மன்றாடியேனும் நின்று வழக்காடியேனும் பெற்றுத் தரத்தக்க தாயும் ஆன தன்மைக்குரியவர் தாயுமானவர்.

எமக்காக எவ்வாறு புலியூர்ப் பொன்னம்பலத்தாடுவானிடம் அவர் முறையிடுகின்றார் என்பதனைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

''எல்லாம் உன் அடிமையே! எல்லாம் உன் உடைமையே!!  
எல்லாம் உன்னுடைய செயலே!!!  
எங்கணும் வியாபி நீ என்று சொலும் இயல்பு என்று  
இருக்காதி வேதம் எல்லாம்

சொல்லால் முழக்கியது; மிக்க உபகாரமாய்ச்  
சொல் இறந்தவர்களும் விண்டு  
சொன்னவையும் இவை; நல்ல தருவான பேரும்  
தொகுத்த நெறிதானும் இவையே;

அல்லாமல் இல்லையென நன்கு அறிந்தேன்;  
அறிந்தபடி நின்று சுகம் நான்  
ஆகாத வண்ணமே இவ்வண்ணம் ஆயினேன்;  
அதுவும் நினது அருள் எனவே

கல்லாத அறிஞனுக்கு உள்ளே உணர்த்தினை  
கதிக்கு வகை ஏது புலகாய்?  
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு  
கருணாகரக் கடவுளே.

ஞானக்கதிர்

# சரித்திரத்தில் ஒரு துளி

### சலீம்

மக்கா நகரத்திலே ஒரு கிழவி இருந்தாள். முகம்மதுநபி(ஸல்) அவர்களின் சத்தியபோதனைகளைக் கேட்டுமருண்டு, அவர்கள் மீது வஞ்சம் கொண்டு, அவர்களுக்கு சொல்லொணா இடுக்கண்களைச் செய்துகொண்டிருந்த மக்காவாசிகளில் அந்தக் கிழவியும் ஒருத்தி.

பெருமானார் நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் செல்லும் பாதைகளிலும் கல்லையும் மண்ணையும் முள்ளையும் வீசி எறிந்து அவர்களைத் துன்புறுத்துவது இந்தக் கிழவியின் வேலை.

அவற்றையெல்லாம் பொறுமையுடனும் புன்முறுவலுடனும் பெருமானார் சகித்துக் கொண்டார்கள்.

கிழவியின் உபத்திரவம் சில நாட்களில் நின்றுவிட்டது. கிழவியையும் காணோம்.

பெருமானார் அவர்கள், அவளைப்பற்றி விசாரித்தார்கள். கிழவி நோய்வாய்ப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

அவளது குடிசைக்கு உள்ளே பெருமானார்



சென்றார்கள். கிழவியின் கண்களிலே ஆச்சரியம் படர்ந்தது!

உதவியற்றுப் படுத்திருந்த கிழவியின் தலையை அன்போடு வருடிய பெருமானாரவர்கள் தங்களது திருவாய் திறந்து சொன்னார்கள்;

''கவலைப்படாதே அம்மா! இறைவன் உனக்குக் குணமளிப்பான். அதுவரை உனக்கான தேவைகளை என்னால் முடிந்தவரை செய்கிறேன்''

அப்பொழுது கிழவி ''பெருந்தகையான உங்களுக்கா இத்தனை நாள் நான் இன்னல் செய்தேன்'' என்றாள்.

இதைக் கூறிய கிழவியின் கண்களில் கண்ணீர் சுரந்தது.

அந்தக்கண்ணீர் அவளது நெஞ்சத்திலிருந்த வஞ்சத்தையும் போக்கிவிட்டது.

## பொய்யாமொழி



குறள்:

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை  
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.

பொருள்:

மகன் தன் தந்தைக்குச் செய்யத்தக்க கைம்மாறு, 'இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ' என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

## கொள்ளையின் பின் கட்டடம் தீ வைப்பு
### வந்தாறுமூலையில் சம்பவம்

மட்டக்களப்பு, பெப் .7

வந்தாறுமூலையில் உள்ள கமத்தொழில் சேவை நிலையத்தினுள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டி, நிலையத்தின் கதவுகள், யன்னல்கள், காற்றுடிகள் தளபாடங்களை இரண்டு டிராக்டர்களில் ஏற்றிச் சென்றனர்.

இச்சம்பவம் 4-2-86 இரவு இடம் பெற்றது. முடிவில் கட்டடத்துக்கும் நெருப்பு வைத்துவிட்டே கோஷ்டி சென்றது. இதனால் கட்டடம் தீக்கிரையானது.

## தீவுப் பகுதியில் தனியார் சீஷன் டிக்கெட்

வேலணை, பெப்.7

தீவுப் பகுதி தனியார் போக்குவரத்து சேவையினர் பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த கட்டண சீஷன் டிக்கெட் முறையை ஆரம்பித்துள்ளனர்.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த சீஷன் டிக்கெட் முறையினால் இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் நன்மை அடைந்து வருகின்றார்கள்.

# ஹெலிக்கொப்டர் குண்டுகளைப் பொழிய ஆற்றுக்குள் பாய்ந்து தப்பினர்

## கிளிநொச்சி பிரஜைகள்குழு உறுப்பினருக்கு ஏற்பட்ட அனுபவம்

உருத்திராபுரம், பெப்.7

கிளிநொச்சி பிரஜைகள் குழு பிரமுகர்கள் இருவரை ஹெலிக்கொப்டர் துரத்திச் சரமாரியாகச் சுட்டபோது அவர்கள் இருவரும் தமது சைக்கிளை வீசிவிட்டு ஆற்றில் குதித்து மயிரிழையில் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் இம்மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் வட்டக்கச்சியிலுள்ள பன்னங்கண்டிப் பாலத்தடியில் நடந்தது.

இவ்வாறு உயிர் தப்பியவர்களில் ஒருவர் கிளிநொச்சி பிரஜைகள் குழு தனாதிகாரி திரு. ரி.எஸ். தர்மசிங்கம், மற்றவர் பிரஜைகள் குழு உபதலைவர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி. இருவரும் பத்திரிகையாளர்கள்.

சம்பவம் பற்றிக்கூறியதாவது;-

சம்பவதினம் கல்மடுவ நகரில் இராணுவத்தினருக்கும், இளைஞர்களுக்குமிடையில் நேரடிமோதல் ஏற்பட்டிருந்தது.

கல்மடு, இராமநாதபுரம், வட்டக்கச்சி மக்கள் தத்தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

இராமநாதபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தேவாலயம் இராமநாதபுரம் மேற்கு (வட்டக்கச்சி சில்வாறோட்) அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் அகதிகளாக அவர்கள் தஞ்சமடைந்தனர்.

சனிக்கிழமை முதலாம் திகதி காலை பத்து மணி அளவில் இந்த விஷயம் கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தலைவர் டாக்டர் கே. சுப்பையாவுக்கு அறிவிக்கப்பட்டது.

அவர் உடனடியாக அதன் தனாதிகாரியை அழைத்து நேரில் சென்று சம்பவத்தைப் பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

அதன்படி தனாதிகாரி திரு. ரி. எஸ். தர்மசிங்கம், செயலாளர் திரு. ரி. ஸ்ரீஸ்கந்தராசா, உபதலைவர் டாக்டர் கே. வி. திருலோகமூர்த்தி, நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கிளிநொச்சி மாவட்டத் தலைவருமான திரு. [illegible] பேப்பல் ஆகியோர் கிளிநொச்சியிலிருந்து பகல் 12 மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிடுவதற்காகப் புறப்பட்டனர்.

### வீதியில் சனம் இல்லை

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி வரை எந்த வித சனநடமாட்டமுமின்றி வீதி வெறிச்சோடிக்கிடந்தது. தேநீர் குடிப்பதற்குக்கூட ஒரு கடைதிறந்திருக்கவில்லை. சகல கடைகளும் பூட்டப்பட்டு பயங்கர அமைதி நிலவியது.

வட்டக்கச்சி கட்சன் வீதியை அவர்கள் அடைந்தபோது, அங்கு ஒரு மூதாட்டியின் மரண ஊர்வலம் நடந்துகொண்டிருந்தது.

முதல் தடவையாக சன நடமாட்டத்தைப் பார்த்தபோது அவர்களுக்கு நெஞ்சில் ''தண்ணி'' வந்தது.

### இளைஞர்கள்

வட்டக்கச்சி பன்னங்கண்டிப்பாலத்தில் பெரிய மரங்கள் போடப்பட்டு வீதி தடை செய்யப்பட்டிருந்தது. அவர்கள் மரங்களுக்கு மேலால் சைக்கிள்களைத் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டியதாயிற்று. இளைஞர்கள் கையில் துப்பாக்கிகளுடனும் கிரெனேட்டுகளுடனும் காணப்பட்டனர்.

வட்டக்கச்சி மரண ஊர்வலத்தில் [illegible] ஒருவரை அவர்கள் சந்தித்தனர். அவரும், வேறு இளைஞர்கள் சிலருமாகச் சேர்ந்து பாதிக்கப்பட்ட இடங்களைக்காட்டுவதாக அவர்களை அழைத்துச் சென்றனர்.

அவர்கள் மிகவும் குறுகிய கரடுமுரடான பாதையால் சென்றுகொண்டிருந்தபோது ஹெலிக்கொப்டர் ஒன்று மேலே பறந்து வரும் சத்தம் கேட்டது.

அதைத் தொடர்ந்து அவர்களை நோக்கி குண்டு மாரி பொழியப்பட்டது. அவர்கள் எல்லோரும் ஓடிச் சென்று வாழைத் தோட்டம் ஒன்றுக்குள் மறைந்துகொண்டனர்.

பின்பு அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு மாயவனூரைச் சேர்ந்த இராசையா சொக்கலிங்கம் என்பவரின் வீட்டுக்குச் சென்றனர்.

சைக்கிள்கள் அனைத்தையும் வீதி ஓரத்தில் சாத்தி வைத்துவிட்டு அவர்கள் உள்ளே சென்றபோது, அவ்வீடு முற்றாக எரிந்து சாம்பல் மேடாகக் காட்சி அளித்தது.

அவ்வீட்டில் இருந்த 10க்கும் அதிகமானவர்கள் ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்குப் பயந்து மரங்களுக்கு அடியில் குழந்தை குட்டிகளுடன் பதுங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

தாங்கள் சிறுகச் சிறுகச் சம்பாதித்த சம்பாத்தியமெல்லாம் எரிந்து சாம்பலாகி விட்டன என்று கூறி அவர்கள் கண்ணீர் விட்டனர்.

மீண்டும் ஹெலிக்கொப்டர் சத்தம் கேட்டது. ''ஐயா உங்களின் சைக்கிளகள் வெளியே இருப்பதால் அவர்கள் எம்மீது மீண்டும் குண்டுமாரி பொழிவார்கள். தயவு செய்து உடனடியாகச் சென்று விடுங்கள் என்று கெஞ்சினர். உடனடியாக ஆறுதல் கூறிவிட்டு அவர்கள் புறப்பட்டனர்.

கரடு முரடான பாதையில் அவர்கள் தொடர்ந்து சென்று கொண்டிருந்தபோது, ''ஆகாயத்திலிருந்து சுடுகிறார்கள். ஓடி மறையுங்கள்'' என்று கூறிக் கொண்டு இளைஞர்கள் சிலர் தமது கையில் இருந்த துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர். ஆகாயத்திலிருந்தும் சூடுகள் பூமியை நோக்கி வந்தவண்ணமிருந்தன.

### மாட்டுக் கொட்டிலுக்குள்

அதனால் பீதியடைந்த அவர்கள் கிராமசேவகருடன் வீதி ஓரத்தில் இருந்த மாட்டுக் கொட்டிலுக்குள் ஓடி மறைந்தனர். சரமாரியாக இருபக்கத்திலிருந்தும் வெடிச்சத்தங்கள் கேட்டன.

இளைஞர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத ஹெலிக்கொப்டர் மேல் நோக்கிப் பறந்தது.

மீண்டும் அவர்களின் பிரயாணம் தொடர்ந்தது. சில நிமிடங்களில் சில்வா றோட் அ. க. த. பாடசாலையை அடைந்த அவர்கள் அங்கு அகதிகள் இல்லாமல் இருப்பதைக் கண்டு அதிசயித்தனர்.

அப்போது அங்கு நின்ற இளைஞர்கள், அகதிகள் பயத்தில் வேறு இடத்திற்குச் சென்றுவிட்டதாகக் கூறினர்.

அப்போது ஆகாயத்திலிருந்து மீண்டும் குண்டுமாரி பொழிய ஆரம்பித்தது. எல்லோரும் பாடசாலைக்குள் பதுங்கிக் கொண்டனர். இளைஞர்கள் மட்டும் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர்.

### சலவைத் தொழிலாளி

ஆகாயத்திலிருந்து குண்டுமாரி பொழியப்பட்டதால் சலவைத் தொழிலாளியான கந்தையா என்பவரின் வீட்டுக்குள் குண்டுகள் விழுந்து அவரின் மகன் செல்லக்கிளி (17 வயது) என்பவர் இறந்தார்.

மூத்த மகனான தர்மரத்தினம் (32 வயது) என்ற 3 பிள்ளைகளின் தந்தை மீதும் குண்டுகள் பட்டு அவர் குற்றுயிராகக் கிடந்தார்.

இவரை உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல பயத்தினால் எவரும் முன்வரவில்லை. இந்த ஏழைத் தொழிலாளி ஒருவரின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது.

நேரம் மாலை 6மணியிருக்கும். பிரஜைகள் குழுவினர் கிராமசேவகருக்கும், ஏனையோருக்கும் நன்றி கூறிவிட்டு மிகுதி இடங்களைப் பார்வையிட நாளை வருவதாகக் கூறிச் சென்றனர். அவர்களில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BITSMANS Institutes
MANIPAY.
87 AUG. பௌதிகவியல் (HEAT)
திரு. சௌந்தி B.Sc. (Hons)
ஆரம்பம்: 8 - 2 - 86 Sat, 7.00 A.M.
87 Aug. தாவரவியல் [உருவவியல்]
திரு குகாதரன் B.Sc.
ஆரம்பம்: 9 - 2 - 86 ஞாயிறு 3.30 P.M.

உதயன்

07. 02. 1986

BITSMANS Institutes
MANIPAY.
2 ஆவது பிரிவு ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH
with GRAMMAR
By Mr. S. B. IYA R (Nallur)
ஆரம்பம்: 8 — 2 — 86
Sat. 4-00 p.m.

பிரிட்டிஷ் பெண் விவகாரம்

# செஞ்சிலுவைச் சங்க ஜெனீவா பிரதிநிதிகள் வர அரசு அனுமதியாது

கொழும்பு, பெப். 7

ஜெனீவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இலங்கை வந்து பிரிட்டிஷ் பெண்ணைப் பொறுப்பேற்க இலங்கை அரசு கடைசிவரையும் அனுமதிக்காது.

இப்படி அரசாங்க வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

முல்லைத்தீவில் வைத்து பிரஸ்தாபப் பெண் ஈரோஸ் இயக்கத்தினரால் கடத்தப்பட்டது தெரிந்ததே.

பிரிட்டிஷ் பெண்ணை பிரிட்டிஷ் தூதரகம் அல்லது பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கலாம். அதற்கு இலங்கை அரசாங்கம் இடைஞ்சலாக இருக்க மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜெனீவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தூதுக் கோஷ்டி இங்கு வருவது என்றால் அதற்கு யாழ்ப்பாணம் சென்று வர பாதுகாப்பு வழங்கும் பிரச்சினை ஏற்படும்.

ஆகவே சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் வந்து போவதை அனுமதிக்க முடியாது.

இப்படி அந்த அரசாங்க வட்டாரங்கள் மேலும் கருத்துத் தெரிவித்தன.

திருமதி வில்லிஸ் பெனிலோப் என்ற இப்பெண் ஜனவரி 17 இல் கடத்தப்பட்டார்.

இவரை இலங்கை அரசின் உளவாளி என்று கூறும் இவரின் பேட்டி ஒன்றை ஈரோஸ் இயக்கம் அண்மையில் வெளியிட்டிருந்தது

## யாழ் செயலக பகுதியில் கிடந்த பணம் யாருடையது?

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ் செயலகக் கட்டடப் பகுதியில் கடந்த வாரம் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகைப் பணம் பற்றி யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்

அறிக்கை வருமாறு;

கடந்த வாரத்தினுள் ஒருசிறு தொகைப் பணம் யாழ் செயலகக் கட்டடப் பகுதியில் விழுந்து இருந்ததைக் கண்டு எடுத்த ஒரு செயலக உத்தியோகத்தர், அதை யாழ் அரச அதிபரிடம் கையளித்துள்ளார்.

பணத்தைக் கைதவற விட்டவர் தயவு செய்து முழு விவரங்களையும் 11. 2. 1986க்கு முன்னர் அரச அதிபரிடம் சமர்ப்பித்து அப்பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்,

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மந்திகை ஆஸ்பத்திரி டாக்டர்கள், தாதிகள் ஊழியர் சுறுசுறுப்பு

பருத்தித்துறை, பெப். 7

பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தினால் காயம் அடைந்தோருக்குச் சிகிச்சை அளிப்பதில் மந்திகை ஆஸ்பத்திரி பயிற்சி டாக்டர்கள், தாதிகள், சிற்றூழியர்கள் உற்சாகத்துடன் செயல்பட்டார்கள்.

இதே வேளை அவசர நோயாளர்களை யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல இங்கு அம்புலன்ஸ் இல்லாதிருந்தது.

தனியாரின் வாகனங்களிலேயே அவசர நோயாளிகள் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

## சிமியாம்பிள்ளை வலயப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம் பெப். 7

வடபிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை வலயப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார்.

## ஓய்வூதியம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு.

19-2-86:-கொடிகாமம், கரவெட்டி, வல்வெட்டித்துறை, சுழிபுரம்.

20-2-86:-சுன்னாகம், உரும்பராய், கோப்பாய், வண்ணார்பண்ணை.

21-2-86:- சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, மானிப்பாய், கைதடி.

25-2-86:- அளவெட்டி, அச்சுவேலி, காரைநகர், வேலணை, சங்கானை.

26-2-86:-நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, யாழ்ப்பாணம்.

## ராஜீவுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்களுக்குத் தெரியவந்து உள்ளது

இனப்பிரச்சினைத் தீர்வு காணுவதில் இலங்கை அரசு உண்மையிலேயே அக்கறையாக இருக்கிறதா என்பதிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையிடமிருந்து அடுத்த 2,3 வாரங்களுக்கு இடையில் எழுத்து மூலமான ஆக்கபூர்வமான பதில் கிடைத்தால் ஒழிய, திரு. ரொமேஷ் பண்டாரி இலங்கை விஜயத்தை மேற்கொள்ளமாட்டார்.

இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்கள் மீண்டும் சூழ்நிலை ஏற்படுமானால், அது ஒரு கால வரம்பு நிர்ணயிக்கப்பட்டே நடத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா இறுக்கமாக இனி இருக்கும்.

இப்படி திரு. ரெட்டி 'இந்து' வில் எழுதியுள்ளார்.

## ஹெலிக்கொ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு ரி. ஸ்ரீஸ்கந்தராசாவும், திரு. எஸ். கோபாலும் முன்னே சைக்கிளில் வேகமாகச் செல்ல திரு. ரி.எஸ். தர்மசிங்கம், டாக்டர் கே. வி கே. திருலோகமூர்த்தி ஆகியோர் மெதுவாக பின்னே சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர்.

வட்டக்கச்சி விவசாயப் பண்ணையடியிலுள்ள தேநீர்க்கடையில் பின்னால் சென்ற இருவரும் தேநீர் குடித்துவிட்டு மீண்டும் சைக்கிளில் ஏறிச் சென்றபோது பின்னாலிருந்து ஹெலிக்கொப்டர் ஒன்று அவர்களை நோக்கிச் சுட்டது.

இருவரும் வேகமாகச் சைக்கிளை மிதித்துக் கொண்டு பன்னம் கண்டிப் பாலம் வரை சென்று பாலத்தில் சைக்கிள்களைப் போட்டுவிட்டு ஆற்றில் குதித்தனர்

அப்போதும் ஹெலிக்கொப்டர் அவர்கள் இருவரையும் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

ஆற்றுக்குள் நின்ற பெரிய மரங்கள் இரண்டுக்குப்பின்னால் அவர்கள் இருவரும் மறைந்து கொண்டனர்.

சுமார் 10நிமிடம் வரை நடைபெற்ற இச்சம்பவத்தின்பின் ஹெலிக்கொப்டர் வேறு திசையை நோக்கிப் பறந்து சென்றது.

அதன் பின் அவர்கள் இருவரும் ஆற்றுக்குள் இருந்து வெளியேவந்து சைக்கிளை எடுத்த போது மீண்டும் அவர்கள் இருவரையும் நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்த இருவரும் செய்வதறியாது மீண்டும் அதே ஆற்றில் குதித்து நீந்திச் சென்று மரங்களின் பின்னால் பதுங்கிக் கொண்டனர்.

குண்டுமாரி பொழிந்துவிட்டு மீண்டும் ஹெலிக்கொப்டர் சென்றபின் அவர்களிருவரும் வெளியே வந்து பார்த்த போது அவர்களிடம் இருந்த பொருள்கள் ஆற்று நீரில் இழுத்துச் செல்லப்பட்டிருந்தன.

பின்பு அவர்கள் கிளிநொச்சியை அடைந்தனர்.

## பஹ்ரைனில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிடம் அடையாளக் கார்ட்டைக் கேட்டனர். இவர்களிடம் அடையாளக் கார்ட் இருக்கவில்லை. பாஸ்போட்டைக் காட்டினர். சந்தேகம் கொண்ட வங்கி அதிகாரிகள் இளைஞர்களைப் பொலீஸில் ஒப்படைத்தனர்.

தீவிரவாதிகளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் இளைஞர்களை விசாரித்து வருகின்றனர்.

## நேற்றும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பீரங்கித் தாக்குதலில் பல வியாபார ஸ்தாபனங்கள் சேதமுற்றன.

ராணி ஆபரண மாளிகை, நாகலிங்கம்ஸ் இரும்புப் பொருள் விற்பனை நிலையம், சிவன் கோயில் அருகாமையிலுள்ள கிறைண்டிங் மில் ஆகியவையும் சேதம் அடைந்தன.

மேலும் மோட்டோ ஷெல் தாக்குதலினால் முருகானந்தம் மருத்துவ நிலையமும் பலத்த சேதத்துக்குள்ளாகியது. தற்காலிக சந்தைக் கட்டடத்திலுள்ள கடையொன்றின் மீது பீரங்கிக் குண்டுத் தாக்குதலினால் கடையிலிருந்த திரு. சிவகுருநாதன் (வயது 50) காயமடைந்தார். அவர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உடனடியாக அப்பகுதி இளைஞர்களினால் சேர்க்கப்பட்டார்.

புதனன்று நடந்த சம்பவத்தின்போது பருத்தித்துறை நகரத்தைச் சுற்றியுள்ள அயற்கிராமங்களான ஆத்தியடி, தம்பசெட்டி, வாணக்குடியிருப்பு, கூவில், தும்பளை, கற்கோவளம், வராத்துப்பளை, மாதனை ஆகிய பகுதிகளிலும் பீரங்கிக் குண்டுகள் வந்து விழுந்தன.

இதனால் பல கட்டடங்களும் மரங்களும் சேதமுற்றன. இத் தாக்குதலில் திருமதி ஈ. வேலுப்பிள்ளை (வயது 45) புலோலி மேற்கு, செல்வி எஸ். கந்தசாமி (வயது 20) வாணக்குடியிருப்பு ஆகியோரும் காயமுற்றனர்.

பருத்தித்துறை நவீன சந்தைப் பகுதியிலுள்ள மின்சார வயர்கள் அறுந்து தொங்குகின்றன. இதனால் நகரின் ஒரு பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

புதன் மாலை கடற்கரைப் பகுதியில் இரண்டு பீரங்கி பொருத்திய கப்பல்கள் நடமாடின. அவற்றிலிருந்து தும்பளை, கற்கோவளம் பகுதிகளுக்குப் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

புதன் மாலை வரை துப்பாக்கி வெடிச்சத்தங்களும், பீரங்கித் தாக்குதலகளும் ஹெலிக்கொப்டர் வெடிச்சத்தங்களும் சுமார் ஆறு மணி நேரம் வரை தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்தன.

ஹெலிக்கொப்டர் ஒன்று பல மணி நேரம் பறந்து நோட்டமிட்ட வண்ணமிருந்தது. இப்பகுதி மக்கள் பீதியினால் தமது வசிப்பிடங்களை விட்டுப் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

## ரெலோ அறிக்கை

யாழ்ப்பாணம், பெப்.7

தனது ஒடுக்கு முறைகளை பல்வேறு வடிவங்களில் விஸ்தரித்துவரும் இனவாத அரசுக்குஎதிராக மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு போராட வேண்டியது அவசியமாகும்.

இதற்கான ஆரம்ப நிலையே ஈழ தேசிய விடுதலை முன்னணியின் ஒருங்கிணைப்பாகும்.

ஆனாலும் சில ஸ்தாபனங்கள் இணைப்பை நிராகரித்து தமது ஆளுமைகளை நிலைநாட்ட முற்படுவது வேதனைக்குரியது

இவ்வாறான சம்பவங்கள் தற்சமயம் மட்டக்களப்பில் நடைபெற்று வருகின்றன. ஈரோஸ் தோழர் ஒருவர் உட்பட மூவரை கொள்ளைகள் தொடர்பாக விசாரணை செய்ய முயன்ற எம் தோழர்கள் மூவர் ஈரோஸ் இயக்கத்தினரால் தாளையடிவட்டையில் கைது செய்யப்பட்டுள்ளனர்

இந்தச் செயலையடுத்து ஈரோஸ் முகாமுக்குள் உட்புகுந்த எம்மால் எமது தோழர்கள் மீட்கப்பட்டதுடன் ஈரோஸ் தோழர்கள் மூவர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டனர் .

விசாரணை முடிவில் ஈரோஸ் தோழர்கள் மூவரும் விடுதலை செய்யப்பட்ட பின் எமது முகாமுக்குள் உட்புகுந்த ஈரோஸ் தோழர்கள் எமது தோழர்கள் பதினொரு பேரை கைது செய்ததுடன் மேலும் எட்டுப் பேரையும் கைது செய்தனர்.

இதற்குப் பின் ஈரோஸின் பாதுகாப்பில் இருந்து தப்பி வந்த எம் தோழர்கள் நால்வரும் மிகவும் கேவலமான முறையில் கத்தியாலும் சைக்கிள் செயினாலும் தாக்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் தற்சமயம் உள்ளார். அத்துடன் தொடர்ந்தும் எம் தோழர்களில் பதினெட்டுப் பேர் (சில ஆயுதங்களும்) ஈரோஸிடம் உள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இயக்கவாதங்களைமேலும் வளர்க்காது ஒன்றிணைந்து போராடவேண்டிய தன் அவசியத்தை உணர்ந்து, கூட்டமைப்பை வலுப்படுத்தக்கூடிய பொது வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அவசியமானது.

மக்களுக்கு எதிராகச் செயற்படும் சக்திகளை நிராகரித்து மக்களின் விடுதலைக்கு ஒன்றிணைந்து போராடுவதன் மூலமே மக்களின் விடுதலை கூடிய விரைவில் மீட்டெடுக்க முடியும்.

மேற்கண்டவாறு தமிழ்ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## மானிப்பாயில் ஊர்வலம்

சுண்டுக்குளி, பெப். 7

பாதுகாப்பு வலய பிரகடனத்தை ஆட்சேபித்து மானிப்பாய் பிரதேச வெகுஜனக்கூட்டுக் குழு இன்று(வெள்ளிக்கிழமை) ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துகின்றது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து இந்த ஊர்வலம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

## ராணுவம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. ஜெயக்கொடி சென்ற கார் முகாமில் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்துசெல்ல முயற்சித்தபோது, ஆயுதப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

திரு. ஜெயக்கொடிக்கு கையிலும், வயிற்றிலும் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு அவசர சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தின்போது கூடஇருந்த எம். பியின் மைத்துனரும் படுகாயமடைந்தார். இருவரின் நிலையும் அபாயகரமானதாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இராணுவமும் பொலிஸாரும் கூட்டாக இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்துகின்றனர்.

இலங்கைப் பல்கலைக்கழக
வெளிநிலைப் பாட நெறிகள்
பாடநெறி —சட்டம் (LL.B)
விரிவுரைகள்
2-3-86 இல் ஆரம்பமாகின்றன.
க.பொ.த. உயர்தரம் சித்தி பெற்றோர் விண்ணப்பிக்கலாம்.
விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்க
REGISTAR,
Jaffna Law Academy
Power House Road, JAFFNA.

நவா மினி (உஷா மினி முன்பாக)
புதிய வெளியீடு
(பகல் 12-30, இரவு 9-00 மணி காட்சியும் உண்டு)
இலங்கையிலேயே முதல் தரமாக எமது மினியில் மட்டுமே காண்பிக்கப்படுகிறது.



Tigers Don't Cry Success Your's
"புலிகளே அழவேண்டாம் வெற்றி உமதே"

உமா மினி (உஷா மினி முன்பாக நவா மினி அருகில்)
ராஜ கோபுரம்
இலங்கையிலேயே முதன் முறையாக வெளியிடப்படுகிறது.

## ஓராண்டு நினைவஞ்சலி



பரராசசிங்கம் சிவதர்சனி
பரராசசிங்கம் சிவநந்தினி
கிளிநொச்சி

| ஆண்டவனால் ஆக்கம்; | அரக்கரால் மறைவு: |
|---|---|
| 12-08-1974<br>09-08-1977 | 19—01—1985 |

திதி: 7 - 2 - 1986

அன்பின் திரு உருவங்களே! குலத்தின் கொழுஞ்சுடர்களே! அலைகடலுக்கப்பாலிருந்து உங்கள் பண்பையும் படிப்பையும் எண்ணி இருந்தேன் உங்கள் அப்பா. ஈனஇரக்கமற்ற அரக்கர்கள் முற்றத்தில் விளையாடி நின்ற இளம் பிஞ்சுகளை தமிழ் உலகமே கண்டு கதிகலங்கும்படி பறித்துவிட்டார்கள், பாவம் ஒன்றும் அறியாச் செல்வங்களே! உங்கள் பற்றும் பாசமும் எங்கள் எல்லோரது எண்ணத்தை விட்டும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

கிளிநொச்சி.

அன்புத் தாய், தந்தை, தம்பி,
மாமன்மார்கள், மாமி,
சித்தி, பேரன், பேத்தி.

உ
சிவமயம்



நாளை
சஞ்சீவியில்
இங்கே
பாருங்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிட்டுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் லிமிடெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.